செய்தி வெளியீடு எண் : 15 நாள் :08.06.2020

**தேனி மாவட்டம்**

**தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளதால் ஆற்றுங்கரையோரங்களில் வசிக்கின்ற பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ம. பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்:-**

******

இந்திய வானிலை ஆய்வு மையத்தால் தேனி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை துவங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. முல்லைப் பெரியாறு நீர் பிடிப்பு பகுதிகளில் பருவமழை பெய்து வருவதால் நீர்வரத்து அதிகரிக்கவும் முல்லைப் பெரியாறு அணையிலிருந்து நீர் வெளியேற்றம் அதிகரிக்கவும் வாய்ப்புள்ளது. இதனால், ஆற்றங்கரைப்பகுதிகளில் வசிக்கின்ற பொது மக்கள் கவனமுடனும், முன் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டும். திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட வாய்ப்புள்ளதால், பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பாதுகாவலர்களின் துணையின்றி ஆற்றங்கரைப் பகுதிகளில் விளையாடவோ, குளிக்கவோ அனுமதிக்கக் கூடாது.

மாவட்டத்தில் மழை நீர் வெள்ளப்பெருக்கு ஏற்படும் மற்றும் மழை நீர் தேங்கும் பகுதிகளை கண்டறிந்து, மீட்பு பணியில் ஈடுபடுவதற்கான மீட்பு குழுக்களை தயார் நிலையில் வைத்திடவும், வெள்ளம் பாதிப்படைய வாய்ப்புள்ள பகுதிகளை கண்டறிந்து, நிவாரண முகாம்களில் பொதுமக்களை தங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், நிவாரண முகாம்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை முன்னெச்சரிக்கையாக செய்திடவும், பொதுமக்கள் வெள்ளம் பாதிப்புகள் குறித்த புகார்களை தெரிவித்திட 24 மணி நேரமும் செயல்படும் வண்ணம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் செயல்பட்டு வரும் பேரிடர் மேலாண்மை அலுவலகத்தில் கட்டுப்பாட்டு அறை அமைக்கப்பட்டு, பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்களை பதிவு செய்து, சம்பந்தப்பட்ட பகுதி அலுவலர்களுக்கு உடனடியாக தெரியப்படுத்தி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளவும், பொதுமக்களுக்கு மருத்துவ உதவிகளை அளித்திட மருத்துவக்குழுக்களை தயார் நிலையில் வைத்திட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் மழையின் காரணமாக கால்நடைகளுக்கு ஏற்படும் தொற்று நோயினை தடுத்திட தேவையான மருந்து பொருட்கள் மற்றும் உணவுப் பொருட்கள் இருப்பில் உள்ளதை உறுதி செய்திட வேண்டும், நெடுஞ்சாலைத்துறையினர் பாதிப்புக்குள்ளாகும், பகுதிகளில் அவசர காலங்களில் பயன்படுத்த மாற்று சாலை வசதிகளையும் கண்டறிந்து வைத்திருக்க வேண்டும் எனவும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாவட்டத்தில் இயங்கும் 12 மழை மானி நிலையங்களை ஆய்வு செய்து பராமரித்திடவும், நீர்நிலை ஆதாரங்களில் உள்ள முட்செடிகளை அகற்றி வாய்க்கால்களில் தண்ணீர் விரைந்து வழிந்தோடுவதற்கு வழிவகை செய்திடவும், அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மண்ணெண்ணெய், காலி சாக்கு பைகள் ஆகியவற்றினை போதுமான அளவு இருப்பு வைத்திடவும், தினசரி மழை அளவு, அணைகளில் நீர்மட்ட விவரம், கால்நடைகள், குடிசைகள், பயிர் மற்றும் உள் கட்டமைப்புகள் சேதம் குறித்து உடனுக்குடன் மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் தெரிவிப்பதோடு இணையத்தளத்திலும் பதிவேற்றம் செய்திடவும் தினந்தோறும் காலை 08.00 மணிக்குள்ளும், மாலை 04.00 மணிக்குள்ளும் மழை அளவினை கணக்கிட்டு இணைய தளத்தில் பதிவேற்றம் செய்திடவும் சம்பந்தப்பட்டதுறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்கி டாக்கிகள் மூலம் அலுவலர்கள் வெள்ளத்தினால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த தகவல்களை எளிதில் பரிமாறிக்கொள்ளவும், சாலைகளில் விழும் மரங்கள் மற்றும் பாறைகளை அகற்றிட மர அறுவை இயந்திரம், ஜே.சி.பி போன்ற இயந்திரங்களை பயன்படுத்துவதற்கு ஏதுவாக தயார் நிலையில் வைத்திடவும், பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரை பரிசோதித்து குளோரின் கலந்து முறையாக வழங்கிடவும், காய்ச்சிய குடிநீரை பருகிட பொதுமக்களிடம் போதிய விழிப்புணர்வை ஏற்படுத்திடவும், ஆற்றங்கரைப்பகுதிகளில் தேவையான இடங்களில் எச்சரிக்கை மற்றும் விழிப்புணர்வு பதாகைகளை வைத்திடவும், சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மழை, வெள்ளம் மற்றும் இயற்கைப் பேரிடர் தொடர்பான தங்களது புகார்களை 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும், 04546-261093 என்ற எண்ணிலும் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**